தொலைபேசி: 04144-238027 தொலைநகல்: 04144-238145

# அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

## தொலைதூரக் கல்வி தேர்வுத் துறை

தேதி: 16/09/2020

## தேர்வு எழுதும் தொலைதூரக் கல்வி மாணவர்களுக்கான வழிமுறைகள்

1. தேர்வுகள் **இணையவழி** மூலம் மட்டுமே நடத்தப்படும்.
2. தேர்வு வினாக்கள் தேர்வு தொடங்குவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பு மாணவர்களுடைய மின் அஞ்சலுக்கு (E-mail) அனுப்பப்படும். இதில் ஏதேனும் சிக்கல் ஏற்பட்டால், உரிய **துறை ஒருங்கிணைப்பாளர்** (**Co-ordinator, DDE Wing**), **தொலைதூரக் கல்வி இயக்ககத்தை அணுகலாம்**.
3. மாணவர்கள் **A4** அளவு தாள்கள் மற்றும் **அதிகபட்சமாக 40 பக்கங்களை** மட்டுமே தேர்வுக்கு பயன்படுத்த முடியும்.
4. விடைத்தாளின் **முதல் பக்கத்தில்**, மாணவர்கள் தெளிவாக தங்களுடைய பட்டப் படிப்பு, ஆண்டு, தாள் எண், தாளின் பெயர், பதிவு எண் போன்ற விவரங்களை தங்களுக்கு வழங்கப்பட்ட படிவத்தில் **(Template)** எழுத வேண்டும். மேலும், மாணவர்கள் விடைத்தாள்களின் ஒவ்வொரு பக்கத்திலும் தங்களுடைய தேர்வு பதிவு எண் **(Reg. No.)** மற்றும் பக்க எண் (உதாரணம்: முதல் பக்கத்தில் **003M20001T0012 - 1** என்றும், **003M20001T0012 - 2** என்று இரண்டாவது பக்கத்திலும் மற்றும் இதைப்போல் இதர பக்கங்களிலும்) தவறாமல் எழுத வேண்டும்.
5. மாணவர்கள் ஒவ்வொரு மென்நகல் (**Soft Copy**) கோப்புகளுக்கு **(File)** இவ்வாறாக பெயரிட்டு (உதாரணம்: **003M20001T0012 - 710 Indian Political Thought**) அனுப்ப வேண்டும்.
6. விடைத்தாளில் மாணவர்கள் எந்த பக்கத்திலும் **பெயர் மற்றும் வேறு எந்தவிதமான சிறப்பு குறியீடுகளை** எழுதக்கூடாது.
7. ஒவ்வொரு தேர்வு முடிந்தவுடன், மாணவர்கள் விடைத்தாள்களை ஸ்கேன் செய்து (**PDF** அல்லது **JPEG** வடிவில்) எந்த மின் அஞ்சலில் இருந்து கேள்விதாள்களை பெற்றார்களோ அந்த மின் அஞ்சல் முகவரிக்கு தேர்வு முடிந்தவுடன் ஒரு மணி நேரத்திற்குள் அனுப்ப வேண்டும்.
8. மின் அஞ்சலுக்கு விடைத்தாள்களை அனுப்பிய பிறகு, **மாணவர்கள் எக்காரணத்தைக் கொண்டும் விடைத் தாள்களில் மாற்றம் செய்யக்கூடாது**. அவ்வாறு செய்யும்பட்சத்தில், அது **தேர்வு முறைகேடாகவே** கருதப்பட்டு அம்மாணவர் மீது பல்கலைக்கழக விதிமுறைக்கு உட்பட்டு **ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்**.
9. மேலும், மாணவர்கள் தேர்வு எழுதிய விடைத்தாள்களை மடிக்காமல் பெரிய உறையில் **பாதுகாப்பாக ஒட்டி** அவரவர்களுடைய **ஒருங்கிணைப்பாளர்** பெயரை **குறிப்பிட்டு தொலைதூரக் கல்வி இயக்கக முகவரிக்கு** அன்றே இந்திய அஞ்சல் / கூரியர் மூலம் கட்டாயம் அனுப்பவேண்டும்.